மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14 ஆம் நாள் வெள்ளிகிழமை
நி.இ.ம.எண்.01/2022
நி.ம.எண்.02/2022
அ.வ.எண்.326/2004

கண்ணையன் ... மனுதாரர்/கோரிக்கைதாரர்

/எதிராக/

1. வெங்கடாஜலம் ... எதிர்மனுதாரர்/தீர்ப்பு பெற்றவர்

2. மாரியப்பன் ... எதிர்மனுதாரர்/தீர்ப்பு கடனாளி

இம்மனு கடந்த 13.07.2023 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.P.சுவாமிநாதன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.அருணாசலம் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.மனோகர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம், 1908 கட்டளை 21 விதி 97 மற்றும் பிரிவு 151–ன் கீழ் அ.வ.எண்.326/2004 என்ற வழக்கின் தீர்ப்பாணையின் அடிப்படையில், மனுதாரருக்கு பாத்தியப்பட்ட கோனூர் கிராம ச.எண்.197/14 ல் உள்ள 0.16 செண்ட் நிலத்தின் ஒரு பகுதியான 0.0 1/2 செண்ட் நிலத்தை சுவாதீனம் எடுக்க 1ம் எதிர்மனுதாரர் முயற்சிப்பதால், அ.வ.எண்.326/2004 என்ற வழக்கின் தீர்ப்பாணை ச.எண்.197/14 ல் உள்ள சொத்தை பொறுத்து செல்லாதது என விளம்புகை செய்யக்கோரியும், இந்த நிறைவேற்று மனுவின் சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ச.எண்.197/4 ல் உள்ள 0.0 1/2 செண்ட் நிலத்தினை நீக்கறவு செய்யக்கோரியும், மனுதாரர் இந்த கோரிக்கை மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

(i) நிறைவேற்று மனு எண்.02/2022 ஐ பொறுத்து மனுதாரர் 3ம் நபர் ஆவார். மேற்படி நிறைவேற்று மனுவில் கோருரிமை கோரி, மனுதாரர் இ.ம.எண்.01/2022 என்ற இடைநிலை மனுவை தாக்கல் செய்துள்ளார். ச.எண்.197ல் உள்ள சுமார் 1 ஏக்கர் அளவிலான நிலம் 1970ம் ஆண்டிற்கு முன்பிருந்தே கருப்பண்ண கவுண்டர் மகன் கொமாரசாமி என்பவருக்கு பாத்தியப்பட்டதாகும். மேற்படி நிலம் நத்தம் தரிசு என்பதால், அவற்றிற்கான பட்டா அரசாங்கத்தின் பேரில் உள்ளது.

(ii) மேற்படி கொமாரசாமி தனக்கு பாத்தியப்பட்ட மேற்படி நிலத்தை வெவ்வேறு நபர்களுக்கு வீட்டு மனைகளாக பிரித்து விற்பனை செய்துவிட்டார். மேற்படி நிலம் நத்தம் நிலம் என்பதால், அதனை கிரயம் பெற்றவர்கள், விற்பனை ஆவணங்களை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய இயலவில்லை. கிரயம் பெற்றவர்கள் அரசாங்கத்தில் மனு செய்து நத்தம் பட்டா பெற்றுக்கொண்டனர்.

(iii) இந்நிலையில், மேற்படி கொமாரசாமி தன் அனுபவத்தில் இருந்த நிலத்தின் ஒரு பகுதியான ச.எண்.197/14ல் 0.16 செண்ட் நிலத்தினை கடந்த 21.12.1993ம் தேதியில் மனுதாரருக்கு அனுபவ பாத்திய விடுதலை சுவாதீனப்பத்திரம் எழுதிக்கொடுத்து சொத்தின் சுவாதீனத்தையும் ஒப்படைத்துவிட்டார். மேற்படி ஆவணத்திற்கு பின்னிட்டு மனுதாரர் அவரது குடும்பத்தாருடன் மனு சொத்தில் யாருடைய இடையூறுமின்றி கூரை வீடு அமைத்து வசித்தும், விவசாயம் செய்தும் வருகிறார்.

(iv) இந்நிலையில் கடந்த 26.06.2022ம் தேதியில், 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரின் சுவாதீன அனுபவத்தில் உள்ள ச.எண்.197/14ல் ஒரு பகுதியான 0.01/2 செண்ட் நிலம் தனக்கு பாத்தியப்பட்டது என்றும், மேற்படி நிலத்திற்கு தான் வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பாணை பெற்றுள்ளதாகவும், மேற்படி தீர்ப்பாணையின் அடிப்படையில் நிலத்தின் சுவாதீனத்தை மீட்கதான் மனு தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரரை ஓரிரு நாட்களில் மேற்படி நிலத்தின் சுவாதீனத்தில் இருந்து வெளியேற்றிவிட போவதாகவும், மனுதாரரிடம் தெரிவித்தார்.

(v) இந்நிலையில் மேற்படி வழக்கில் மனுதாரர் தரப்பினாராக இல்லாத காரணத்தினால் மனுதாரருக்கு மேற்படி வழக்கு குறித்து எதுவும் தெரியாத நிலையில் மனுதாரர் தன் வழக்கறிஞரை தொடர்பு கொண்டு 1–ம் எதிர்மனுதாரர் தன்னிடம் கொடுத்த வழக்கு ஆவணங்களை காண்பித்து கேட்ட போதுதான் மேற்படி வழக்கைப்பற்றிய முழு விவரங்களும் மனுதாரருக்கு தெரியவந்தது. பின்னிட்டு தான் 1–ம் எதிர்மனுதாரர் 0.01/2 சென்ட் நிலத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்க கேட்டு இந்நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ள விவரமும் மனுதாரருக்கு தெரியவந்தது.

(vi) தற்போது கோனூர் கிராம ச.எண். 197/4 ஆனது ச.எண்கள். 197/4A முதல் 197/4F வரை பல்வேறு உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு வெவ்வேறு நபர்களின் பெயர்களில் பட்டா வழங்கப்பட்டு மேற்படி நிலங்களில் வீடுகள் கட்டி வசித்து வருகிறார்கள். இந்நிலையில் 1–ம் எதிர்மனுதாரர் கோனூர் கிராம ச.எண்.197/4 –ல் உள்ள சொத்திற்கு தீர்பானை பெற்றுவிட்டு தற்போது மனுதாரரின் சுவாதீனத்தில் உள்ள ச.எண்.197/14–ல் உள்ள 0.16 சென்ட் நிலத்தில் 0.01/2 சென்ட் நிலத்தை சுவாதீனம் எடுக்க முயற்சி செய்துவருகிறார். 1–ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த அ.வ.எண்.326/2004–ஆனது ச.எண்.197/4–க்கு தொடர்புடையது என்பதாலும், மேற்படி வழக்கில் மனுதாரர் தரப்பினர் இல்லை என்பதாலும், மேற்படி வழக்கின் தீர்பு மனுதாரரை கட்டுப்படுத்தாது.

(vii) கோனூர் கிராம ச.எண்.197/14–ல் உள்ள 0.16 சென்ட் நிலத்தின் சுவாதீனத்தில் உள்ள மனுதாரரை அதன் எந்த ஒரு பகுதியிலிருந்தும் வெளியேற்ற 1–ம் எதிர்மனுதாரருக்கு உரிமை கிடையாது. மேலும் 1–ம் எதிர்மனுதாரர் கோரும் 0.01/2 சென்ட் நிலத்திற்கு நான்கு பக்க எல்லைகள் குறிப்பிடவில்லை. 1–ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட ச.எண்.197/14–ல் உள்ள நிலத்திற்கு தவறாக உரிமை கோரி வருவதால் 1–ம் எதிர்மனுதாரரால் அ.வ.ண்.326/2004 என்ற வழக்கில் பெறப்பட்ட தீர்ப்பானை ச.எண்.197/14–ல் உள்ள நிலத்தை பொறுத்து செல்லாதது என விளம்புகை செய்ய கோரியும், மனுதாரரின் சுவாதீன அனுபவத்திலுள்ள ச.எண்.197/14–ல் உள்ள 0.01/2 சென்ட் நிலம்நிலம் இந்த நிறைவேற்று மனுவில் ச.எண்.197/4–ன் ஒரு பகுதியாக குறிப்பிடப்பட்டுள்ளதால் மேற்படி நிலத்தினை நீக்கறவு செய்ய கோரியும், மனுதாரர் இந்த கோரிக்கை மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2) 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

(i) மனு பொய்யானது. சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. கோனூர் கிராமம் ச.எண்.192/4 ல் 77 சென்ட் நிலம் கருப்பண்ணகவுண்டர் மகன் கொமாரசாமிக்கு பாத்தியப்பட்டதாகும். அதில் 16 சென்ட் நிலத்தை கடந்த 20.03.1984 ம் தேதியில் 1ம் எதிர்மனுதாரர் மேட்டூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.357/1982 ன் படி பதிவு கிரயம் பெற்றார். மேற்படி 16 சென்ட் நிலத்தில் 1ம் எதிர்மனுதாரர் கோழிப்பண்ணை வைத்து நடத்தி வந்தார். மேற்படி 1ம் எதிர்மனுதாரரின் கோழிப்பண்ணையில் கூலியாளாக வேலை செய்த தீர்ப்பு கடனாளியான 2ம் எதிர்மனுதாரர் மேற்படி 16 சென்ட் நிலத்தில் ஒரு பகுதியான 0.0 1/2 சென்ட் நிலத்தில் கொட்டகை அமைத்து பிரச்சனை செய்ததால் 1ம் எதிர்மனுதாரர் விளம்புகை, சுவாதீன மீட்பு மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக அ.வ.எண்.326/2004 என்ற வழக்கை தாக்கல் செய்து, அதில் 1ம் எதிர்மனுதாரருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது.

(ii) மேற்படி 1ம் எதிர்மனுதாரருக்கும், 2ம் எதிர்மனுதாரருக்கும் இடையே நடைபெற்ற வழக்கில் தற்போது இந்த கோருரிமை மனுவை தாக்கல் செய்துள்ள மனுதாரர், 2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாக ஆஜராகி 2ம் எதிர்மனுதாரருக்கு ஆதரவாக சாட்சியமளித்துள்ளார். மேலும் மேற்படி அசல் வழக்கிற்கு எதிராக 2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த மே.மு.எண்.33/2014 மாண்பமை மேட்டூர் சார்பு நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு, உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேற்படி மேல்முறையீட்டு உத்தரவிற்கு எதிராக 2ம் எதிர்மனுதாரர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த இ.மே.மு.எண்.58/2022 ம் தள்ளுபடி செய்யப்பட்டு, 2ம் எதிர்மனுதாரருக்கு ரூ.10,000/– அபராதம் விதிக்கப்பட்டது.

(iii) மேற்படி உத்தரவுகளுக்கு பின்னிட்டே 1ம் எதிர்மனுதாரர் நி.ம.எண்.02/2022 ஐ தீர்ப்பாணைக்கிணங்க சுவாதீனம் கேட்டு தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில் மேற்படி வழக்குகளில் சாட்சியாக உள்ள மனுதாரரும், தீர்ப்பு கடனாளியான 2ம் எதிர்மனுதாரரும் கூட்டு சதி செய்து இந்த பொய்யான மனுவை தாக்கல் செய்துள்ளனர். கோனூர் கிராமம் ச.எண்.197/4 குறித்து நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில், மேற்படி

வழக்குகளில் வருவாய் துறையினரும் பிரதிவாதிகளாக உள்ள நிலையில், மேற்படி சர்வே எண்ணில் உட்பிரிவு செய்தது செல்லாத ஒன்றாகும். மேற்படி உட்பிரிவுகள் எதுவும் தீர்ப்பாணை பெற்றவரான இந்த 1ம் எதிர்மனுதாரரை எவ்வகையிலும் பாதிக்காது.

(iv) மனுதாரர் கூறுவதுபோல் அவர் கொமராசாமியிடமிருந்து ச.எண்.197/14ல் 16 சென்ட் நிலத்தை சுவாதீனம் பெற்றதாகவும், அதில் கூரைவீடு அமைத்து வசித்து வருவதாகவும் கூறுவது பொய்யான சங்கதிகளாகும். இம்மனு சொத்து குறித்த வழக்கில் சாட்சியமளித்து அனைத்து சங்கதிகளையும் அறிந்த மனுதாரர் தற்போது துர்லாபம் அடையும் கெட்ட நோக்கில் மேற்படி வழக்கில் தான் தரப்பினர் இல்லாததால் தனக்கு மேற்படி வழக்கு சங்கதிகள் குறித்து எதுவும் தெரியாது என கூறுவதும், மேற்படி வழக்கு சங்கதிகள் தன்னை கட்டுப்படுத்தாது என கூறுவதும் ஏற்கத்தக்கதல்ல. இம்மனு தாக்கல் செய்வதற்கு மனுதாரருக்கு எவ்வித முகாந்திரமும் கிடையாது. எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1ம் எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

<u>3) 2ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

மனு பொய்யானது. சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மேட்டுர் வட்டம், கோனுார் கிராமம், ச.எண்.197/4 என்பது முற்றிலும் பட்டா நிலமாகும். ச.எண்.197/4 என்பது பல உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, வெவ்வேறு நபர்கள் பெயரில் ச.எண்.197/4A முதல் ச.எண்.197/4F வரை பட்டாவாகி உள்ளது. மனுவில் கோரியுள்ள சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமையுடையவர்.

4) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ–1 முதல் ம.சா.ஆ–10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

5) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

6) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர் தரப்பில் கோனூர் கிராம ச.எண்.197/14 ல் உள்ள 0.16 சென்ட் நிலத்தை கொமாரசாமி என்பவரிடமிருந்து மனுதாரர் கடந்த 21.12.1993 ம் தேதியில் அனுபவ பாத்திய விடுதலை சுவாதீனப்பத்திரம் மூலம் சுவாதீனம் பெற்று, நாளது தேதிவரை மேற்படி நிலத்தின் சுவாதீன அனுபவத்தில் இருந்துவருவதாகவும், மேற்படி நிலத்திற்கு மனுதாரரே பூரண உரிமையாளர் என்றும், இந்நிலையில் கடந்த 26.06.2022 ம் தேதியில் 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரை அணுகி மனுதாரருக்கு ச.எண்.197/14 ல் பாத்தியப்பட்டுள்ள 0.16 சென்ட் நிலத்தில் ஒரு பகுதியான 0.0 1/2 சென்ட் நிலத்தின் பேரில் 1ம் எதிர்மனுதாரர் தீர்ப்பாணை பெற்று, அதன் பேரில் நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளதாகவும், விரைவில் மனுதாரரை அவரது சுவாதீன அனுபவத்திலிருந்து வெளியேற்ற போவதாக மனுதாரரிடம் தெரிவித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ii) அப்போது மனுதாரர் மேற்படி வழக்கு ஆவணங்களை தன் வழக்கறிஞரிடம் காண்பித்து கேட்ட போது தான் 1ம் எதிர்மனுதாரருக்கும், 2ம் எதிர்மனுதாரருக்கும் இடையே வழக்கு நடைபெற்ற சங்கதியும், அதன்பேரில் நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்ட சங்கதியும் மனுதாரருக்கு தெரியவந்தது என்றும், 1ம் எதிர்மனுதாரர் ச.எண்.197/4 ல் உள்ள நிலத்திற்கு தீர்ப்பாணை பெற்றுவிட்டு, தற்போது மனுதாரருக்கு பாத்தியப்பட்ட ச.எண்.197/14 ல் உள்ள ஒரு பகுதியான 0.0 1/2 சென்ட் நிலத்தின் சுவாதீனத்தை எடுக்க முயற்சிப்பதாகவும், தற்போது மேற்படி ச.எண்.197/4 ஆனது ச.எண்.197/4A முதல் ச.எண்.197/4F வரை பல்வேறு உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, பட்டா நிலங்களாக வெவ்வேறு நபர்கள் வசம் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iii) மேலும் 1ம் எதிர்மனுதாரருக்கும், 2ம் எதிர்மனுதாரருக்கும் இடையே ஏற்பட்ட வழக்குகளில் மனுதாரர் தரப்பினராக இல்லாததால் மேற்படி வழக்குகளில் ஏற்பட்ட தீர்ப்புகள் மனுதாரரை கட்டுப்படுத்தாது என்றும், எனவே அ.வ.எண்.326/2004 என்ற வழக்கின் தீர்ப்பாணை ச.எண்.197/14 ல் உள்ள சொத்தை பொறுத்து செல்லாதது என

விளம்புகை செய்யக்கோரியும், இந்த நிறைவேற்று மனுவின் சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ச.எண்.197/4 ல் உள்ள 0.0 1/2 செண்ட் நிலத்தினை நீக்கறவு செய்யக்கோரியும், மனுதாரர் இந்த கோரிக்கை மனுதாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(iv) 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் ச.எண்.197/4 ல் 16 செண்ட் நிலத்தை கடந்த 20.03.1984 ம் தேதியில் 1ம் எதிர்மனுதாரர் கொமாரசாமி என்பவரிடமிருந்து பதிவு கிரயம் பெற்றதாகவும், மேற்படி நிலத்தில் 0.01/2 செண்ட் நிலத்தை 2ம் எதிர்மனுதாரர் ஆக்கிரமித்து கொட்டகை அமைத்ததால் அவருக்கு எதிராக அ.வ.எண்.326/2004 என்ற வழக்கை விளம்புகை, சுவாதீன மீட்பு, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்து அதில் 1ம் எதிர்மனுதாரருக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டது என்றும், மேற்படி வழக்கில் இம்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜராகி சாட்சியம் அளித்துள்ளார் என்றும், மேற்படி அசல் வழக்கிற்கு எதிராக 2ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட முதலாம் மற்றும் இரண்டாம் மேல்முறையீடுகள் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

(v) இந்நிலையில், மேற்படி அசல் வழக்கு மற்றும் மேல்முறையீட்டு வழக்குகளில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணைகளை அனுசரித்து 1ம் எதிர்மனுதாரர் இந்நிறைவேற்று மனுவை தாக்கல் செய்துள்ள நிலையில், மேற்படி 2ம் எதிர்மனுதாரரும், மனுதாரரும் கூட்டு சதி செய்து 1ம் எதிர்மனுதாரர் தாவா சொத்தின் சுவாதீனத்தை பெறுவதை தடுக்கும் கெட்ட எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்து மேற்படி தீர்ப்புகள் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், மேற்படி தீர்ப்புகள் தன்னை கட்டுப்படுத்தாது என்றும் மனுதாரர் பொய்யாக கோரிக்கை மனுவை தாக்கல் செய்ததால், மேற்படி மனுவை செலவுதொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

(vi) 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேட்டூர் வட்டம், கோனூர் கிராமம், ச.எண்.197/4 என்பது முற்றிலும் பட்டா நிலமாகும் என்றும், ச.எண்.197/4 என்பது பல உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, வெவ்வேறு நபர்கள் பெயரில் ச.எண்.197/4A முதல் ச.எண்.197/4F வரை

பட்டாவாகி உள்ளது என்றும், மனுவில் கோரியுள்ள சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமையுடையவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

(vii) இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களையும், வழக்கு ஆவணங்களையும் கவனமாக பரிசீலனை செய்ததில் 1ம் எதிர்மனுதாரர் கோனூர் கிராம ச.எண்.197/4ல் உள்ள 16 சென்ட் நிலத்தில் ஒரு பகுதியான 0.01/2 சென்ட் நிலம் தொடர்பாக இந்நீதிமன்றத்தில் 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக விளம்புகை, சுவாதீன மீட்பு மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி வழக்கை தாக்கல் செய்து தனக்கு ஆதரவாக தீர்ப்பாணை பெற்று மேற்படி தீர்ப்பாணை முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தாலும், இரண்டாம் மேல்முறையீட்டு நீதிமன்றத்தாலும் உறுதி செய்யப்பட்டு, அதன்பேரில் தற்போது நிறைவேற்று மனு எண்.2 /2022 ஐ இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(viii) இந்நிலையில், மேற்படி நி.ம.எண்.2/2022 விசாரணைக்காக நிலுவையில் இருக்கும்போது அ.வ.எண்.326/2004 என்ற வழக்கில் பெற்ற தீர்ப்பாணையின் அடிப்படையில், 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட கோனூர் கிராம ச.எண்.197/14ல் உள்ள 0.16 செண்ட் நிலத்தின் ஒரு பகுதியான 0.0 1/2 செண்ட் நிலத்தை சுவாதீனம் எடுக்க முயற்சிக்கிறார் என்றும், அ.வ.எண்.326/2004 என்ற வழக்கின் தீர்ப்பாணை ச.எண்.197/14ல் உள்ள சொத்தை பொறுத்து செல்லாதது என விளம்புகை செய்யக்கோரியும், இந்த நிறைவேற்று மனுவின் சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ச.எண்.197/4ல் உள்ள 0.0 1/2 செண்ட் நிலத்தினை நீக்கறவு செய்யக்கோரியும், மனுதாரர் இந்த கோரிக்கை மனுவினை தாக்கல் செய்துள்ள விவரம் தெரிய வருகிறது.

(ix) மனுதாரர் தரப்பில் மேற்படி தன் வாதத்திற்கு அனுசரனையாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மனுதாரர் தான் கோனூர் கிராம ச.எண்.197/14ல் உள்ள 0.16 செண்ட் நிலத்தை கடந்த 21.12.1993ம் தேதியில் கொமாரசாமி என்பவரிடமிருந்து அனுபவ பாத்திய விடுதலை சுவாதீனப்பத்திரத்தின் படி பெற்று அதன் சுவாதீன அனுபவத்தில் கூரை வீடு அமைத்து

வசித்து வருவதாக மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி அனுபவ பாத்திய விடுதலை சுவாதீன பத்திரத்தின் சான்று நகல் (Certified copy) மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

(x) மேற்படி ம.சா.ஆ.1 அனுபவ பாத்திய விடுதலை சுவாதீன பத்திரத்தின் சான்று நகலை பரிசீலனை செய்கையில் அதில் கருப்பண்ணன் மகன் கொமாரசாமி என்பவர் மனுதாரரிடமிருந்து ரூ.1000/—ஐ பெற்றுக்கொண்டு ச.எண்.197/14—ல் உள்ள 0.16 சென்ட் நிலத்தின் சுவாதீனத்தை ஒப்படைப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது தெரிய வருகிறது. இந்நிலையில், மேற்படி அனுபவ பாத்திய விடுதலை சுவாதீன பத்திரத்தில் கண்டுள்ள வாசகங்கள் சொத்துரிமை மாற்றுச்சட்டம், 1882ன் பிரிவு 54ன் கீழ் விற்பனை என்ற வரையறைக்குள் வருகிறது. மேற்படி பிரிவின் படி ரூ.100/— அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்புடைய அசையா சொத்துக்களை உரிமை மாற்றம் செய்தால், மேற்படி உரிமை மாற்றம் கட்டாயம் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் மூலம் தான் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது சட்டவிதியாகும்.

(xi) அவ்வாறு சொத்துரிமை மாற்றுச்சட்டம், 1882—ன் பிரிவு 54—ன் கீழ் ஏற்படுத்தப்படும் கிரய ஆவணங்கள் இந்திய முத்திரைச் சட்டம் 1899—ல் குறிப்பிட்டுள்ளபடி உரிய முத்திரை தீர்வை செலுத்தப்பட்டு, பதிவுச் சட்டம் 1908—ன் பிரிவு 17(1)—ன் படி பதிவு செய்யப்பட வேண்டியது அவசியமானதாகும். அவ்வாறு இந்திய முத்திரைச் சட்டம் 1899—ல் குறிப்பிட்டுள்ளபடி உரிய முத்திரை தீர்வை செலுத்தப்படாத அல்லது குறை முத்திரைத் தீர்வை கொண்ட ஆவணங்களை அதன் சட்டப்பிரிவு 35—ன் கீழ் சாட்சியமாக ஏற்க இயலாது என்பது சட்ட விதியாகும். அதேபோல் பதிவுச் சட்டம் 1908 —ன் பிரிவு 17 (1)—ன் கீழ் பதிவு செய்யப்படாத கிரய ஆவணத்தை அதன் சட்டப்பிரிவு 49—ன் கீழ் சாட்சியமாக ஏற்க இயலாது என்பது சட்ட விதியாகும்.

(xii) மேற்கண்ட சட்ட நிலைபாட்டின் அடிப்படையில் மனுதாரரால் ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள அனுபவ பாத்திய விடுதலை சவாதீன பத்திரத்தை பரிசீலனை செய்கையில் மேற்படி பத்திரம் இந்திய முத்திரைச் சட்டம், 1899—ன் படி உரிய முத்திரை தீர்வை செலுத்தப்படாமலும், பதிவுச் சட்டம் 1908—ன் பிரிவு 17(1)—ன் கீழ் பதிவு

செய்யப்படாமலும், உள்ளது தெரியவருகிறது. எனவே மேற்படி அனுபவ பாத்திய விடுதலை சவாதீன பத்திரத்தின் அடிப்படையில் கோனூர் கிராம ச.எண்.197/14–ன் கீழ் உள்ள 0.16 சென்ட் நிலத்தைப் பொறுத்து மனுதாரர் எவ்வித உரிமை மூலமும் கோர இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xiii) அதே போல் மனுதாரர் மேற்படி அனுபவ பாத்திய விடுதலை சுவாதீன பத்திரத்தின் அசலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அதற்குண்டான குறை முத்திரைத் தீர்வைக் கட்டணத்தை செலுத்தி, அதை இந்நீதிமன்றத்தில் ஆவணமாக குறியீடு செய்தால் மட்டுமே மனுதாரர் மேற்படி ஆவணத்தை துணை நோக்கங்களுக்காக (Collateral purposes) அனுசரிக்க இயலும். மேற்படி பத்திரத்தின் சான்று நகலின் அடிப்படையில் ச.எண்.197/14 ல் உள்ள 0.16 சென்ட் நிலத்தில் தன்னுடைய சுவாதீனத்தை மனுதாரர் நிரூபிக்க இயலாது. எந்த ஆவணத்தை நேரடியாக நீதிமன்றத்தில் சான்றாவணமாக குறியீடு செய்ய இயலாதோ, அந்த ஆவணத்தை வேறு வடிவத்தில் நீதிமன்றத்தில் ஆவணமாக செய்வதானாலேயே, மேற்படி ஆவணம் சாட்சிய மதிப்பை பெற்றுவிடாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xiv) அவ்வகையில் மனுதாரர் தான் உரிமை கோரும் நிலத்திற்குரிய ஆவணத்தின் அசலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல், மேற்படி ஆவணத்திற்கு மாண்பமை மேட்டுர் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளார் என தெரியவருகிறது. மேற்படி அசல் ஆவணமே குறை முத்திரை தீர்வை கொண்டதாகவும், பதிவு செய்யப்படாததாகவும் உள்ள காரணத்தினால் இந்நீதிமன்றத்தில் சான்றாவணமாக குறியீடு செய்ய இயலாது எனும் நிலையில், மேற்படி ஆவணத்தின் சான்றுநகலை வழக்கு விசாரணையில் சான்றாவணமாக குறியீடு செய்யப்படுவதாலேயே அது சாட்சிய மதிப்பை பெற்றுவிடாது எனவும், எனவே ம.சா.ஆ.1 சான்றாவணம் சாட்சிய மதிப்பற்றது எனவும், அதன் அடிப்படையில் மனுதாரர் ச.எண்.197/14 ல் உள்ள 0.16 செண்ட் நிலத்தை பொறுத்து எவ்வித உரிமையோ, அனுபவமோ கோர இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xv) அடுத்ததாக மனுதாரரால் ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள அ பதிவேட்டின் சான்றிட்ட நகலை பரிசீலனை செய்கையில், கோனூர் கிராம ச.எண்.197/14 ல் உள்ள

நிலமானது அரசு நிலம் என்றும், தற்போது யார் பெயரிலும் மேற்படி நிலம் இல்லை என்றும் தெரியவருகிறது. மேலும் மனுதாரரால் ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள 03.01.2022ம் தேதிய வீட்டுவரி ரசீதின் சான்றிட்ட நகலை பரிசீலனை செய்கையில் மனுதாரரது பெயரில் வீட்டுவரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. ஆனால் மேற்படி வீட்டுவரி ரசீதில் கதவு எண் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேற்படி வீடு எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்பது குறித்து எவ்வித குறிப்புகளும் காணப்படவில்லை என தெரிய வருகிறது.

(xvi) இந்நிலையில் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவை பரிசீலனை செய்கையில், அதில் மனுதாரரின் விலாசம் என்ற இடத்தில் எந்த கதவு எண்ணும் குறிப்பிடப்படவில்லை என்பது தெரியவருகிறது. மேலும் மனுதாரர் தரப்பில் தான் மேற்படி கதவு எண்ணில் தான் தற்போது வசித்து வருகிறார் என்பதை காண்பிக்கும் வகையில் எவ்வித ஆவணங்களும் முன்னிலைப்படுத்தவில்லை என தெரிய வருகிறது. அவ்வாறு உள்ள நிலையில், மேற்படி வீட்டுவரி ரசீது எந்த சர்வே எண்ணில் உள்ள வீட்டிற்கு தொடர்புடையது என்பது குறித்து மனுதாரர் தரப்பில் எவ்வித விளக்கங்களும் அளிக்கப்படவில்லை என தெரிய வருகிறது.

(xvii) அதேபோல் மனுதாரரால் ம.சா.ஆ.9 ஆக கோனுார் கிராம அடங்கலின் சான்றிட்ட நகல் குறியீடு செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேற்படி அடங்கலின் சான்றிட்ட நகலை பரிசீலனை செய்கையில், அதில் கோனுார் கிராம ச.எண்.197/14 ல் தரிசு நிலம் என்றும், அதில் ஒரு கூரைவீடு உள்ளதாகவும் கண்டுள்ளது. ஆனால் மேற்படி அடங்கலில் கைப்பற்றுதாரர் அல்லது அனுபோகதாரரின் பெயர் என்ற இடத்தில் மனுதாரரின் பெயர் குறிப்பிடப்படவில்லை என தெரியவருகிறது. இந்நிலையில் மனுதாரர் கோனுார் கிராம ச.எண்.197/14 ல் உள்ள 0.16 சென்ட் நிலம் தனக்கு பாத்தியப்பட்டது என்பதையும், அதில் தற்போது தான் வசித்து வருவதாக கூறுவதையும் தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் அடிப்படையில் நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xviii) மேலும் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில் இம்மனுதாரர் மேற்படி 1ம் எதிர்மனுதாரருக்கும், 2ம் எதிர்மனுதாரருக்கும் இடையே

நடைபெற்ற வழக்குளில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாக ஆஜராகி, 2ம் எதிர்மனுதாரருக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார் எனவும், எனவே மேற்படி வழக்கின் சங்கதிகள் குறித்து தனக்கு தெரியவில்லை எனவும், கடந்த 26.06.2022ம் தேதியில் 1ம் எதிர்மனுதாரர் கூறிய பிறகு தான் தனக்கு தெரிய வந்தது எனவும் கூறுவதும் ஏற்கத்தக்கதல்ல எனவும், மேற்படி 2ம் எதிர்மனுதாரரும், மனுதாரரும் கூட்டு சேர்ந்து கொண்டு சதி செய்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(xix) மேற்படி 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையில் கண்டுள்ள மேற்படி சங்கதி குறித்து மனுதாரரால் குறிப்பாக எவ்வித மறுப்புரையும் (Reply) தாக்கல் செய்யவில்லை எனவும், மேற்படி சங்கதியை பொய்துரைக்கும் வகையில், எவ்வித சாட்சியங்களையோ, அல்லது ஆவணங்களையோ இந்நீதிமன்றத்தில் மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை என தெரியவருகிறது. அவ்வாறு உள்ள சூழ்நிலையில், 1ம் எதிர்மனுதாரருக்கும், 2ம் எதிர்மனுதாரருக்கும் இடையே நடைபெற்ற வழக்கில் இம்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியாக ஆஜராகி உள்ளார் என்ற சங்கதி உண்மையானது தான் என இந்நீதிமன்றம் அனுமானிக்கிறது. மேற்கண்ட நிலையில், மனுதாரர் மேற்படி வழக்கை பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், மேற்படி வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு தன்னை கட்டுப்படுத்தாது என கூறுவது ஏற்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xx) அடுத்ததாக, இந்நீதிமன்றத்தில் கருத்தில் கொள்ளும் சங்கதி யாதெனில், நி.ம.எண்.02/2022ல் குறிப்பிடப்பட்டுள்ள ச.எண்.197/4ல் உள்ள மனுசொத்தில் தனக்கு உரிமை பாத்தியம் உள்ளதாகவோ அல்லது மேற்படி சொத்தின் சுவாதீனம் தற்போது தன்னிடம் தான் உள்ளது என்றோ மனுதாரர் எங்கும் கூறவில்லை. அவ்வாறு உள்ள நிலையில், மேற்படி அசல் வழக்கில் 0.0 1/2 சென்ட் நிலம் குறித்து பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை மனுதாரரின் ச.எண்.197/14ஐ பொறுத்து செல்லாது என விளம்புகை செய்யுமாறும், நிறைவேற்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ச.எண்.197/4ல் ஒரு பகுதியான 0.0 1/2 சென்ட் நிலத்தை நீக்கறவு செய்யுமாறும் மனுதாரர் கோருவது ஏற்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xxi) அதேபோல் மேற்படி ச.எண்.197/4 ல் உள்ள மனு சொத்துதான் தற்போது உட்பிரிவு செய்யப்பட்டு, மனுதாரரின் சுவாதீன அனுபவத்தில் உள்ளதாக சொல்லப்படும் ச.எண்.197/14 ஆக உள்ளது என்பதோ, அல்லது மேற்படி ச.எண்.197/4 மற்றும் ச.எண்.197/14 ஆகிய சர்வே எண்கள் அருகருகே அமைந்துள்ளது என்றோ, அதனால் 1ம் எதிர்மனுதாரர் தவறாக மனுதாரரின் சுவாதீனத்தில் உள்ளதாக சொல்லப்படும் சர்வே எண்ணான 197/14 ல் உள்ள நிலத்தில் 0.0 1/2 சென்ட் நிலத்திற்கு உரிமை கோருகிறார் என்பதோ, இங்கு மனுதாரரின் வாதமல்ல. அவ்வாறு உள்ள நிலையில், மனுதாரர் எதன் அடிப்படையில் நிறைவேற்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ச.எண்.197/4 ல் உள்ள 0.01/2 சென்ட் நிலம் தான் மனுதாரரின் சுவாதீன அனுபவத்தில் உள்ளதாக சொல்லப்படும் ச.எண்.197/14 ன் ஒரு பகுதி என கூறுகிறார் என்பது குறித்து எவ்வித தெளிவான விளக்கமும் அளிக்கப்படவில்லை.

(xxii) மேலும் 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நி.ம.எண்.02/2022 ல் இந்நீதிமன்றத்தால் சுவாதீனத்திற்கான உத்தரவே பிறப்பிக்கப்படாத நிலையில், மனுதாரர் தன்னுடைய சுவாதீனத்தில் உள்ளதாக சொல்லப்படும் ச.எண்.197/14 ல் உள்ள 0.0 1/2 சென்ட் நிலத்தை தான் மனுதாரர் கையகப்படுத்த முயல்கிறார் என கூறுவது முன்முதிர்வு வாதமாக (Premature plea) இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் ச.எண்.197/4 ஆனது ச.எண்.197/4A முதல் F வரையில் உட்பிரிவு செய்யப்பட்டு விட்டதாக மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. தீர்ப்பாணைப்படி 1ம் எதிர்மனுதாரர் ச.எண்.197/4 ல் உள்ள நிலத்தில் சுவாதீனம் கோரும் நிலையில், மேற்படி ச.எண்.197/4 ஆனது உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதால், மேற்படி சர்வே எண்ணுக்கு சிறிதும் தொடர்பற்ற ச.எண்.197/14 ல் சுவாதீன அனுபவத்தில் உள்ளதாக கூறும் மனுதாரருக்கு என்ன பாதகமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்பது குறித்து மனுதாரர் தரப்பில் எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை என தெரியவருகிறது.

(xxiii) மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையில் மனுதாரர் கோனூர் கிராம ச.எண்.197/14 ல் தனக்குள்ள உரிமையையும், சுவாதீனத்தையும் நிரூபிக்காத நிலையிலும், நிறைவேற்று மனுவில் கண்டுள்ள ச.எண்.197/4 ல் உள்ள சொத்தும், தற்போது கோருரிமை மனுவில் கண்டுள்ள ச.எண்.197/14 ல் உள்ள சொத்தும்

ஒன்றுக்கொன்று தொடர்பற்றவை என தெரிய வருவதன் அடிப்படையிலும், மனுதாரர் 1ம் எதிர்மனுதாரர் மற்றும் 2ம் எதிர்மனுதாரருக்கு இடையே நடைபெற்ற அசல் வழக்கில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியாக ஆஜராகியுள்ள நிலையில் மேற்படி வழக்கு குறித்து தனக்கு எதுவும் தெரியாது என கூறியுள்ளதை கருத்தில் கொள்கையிலும், மனுதாரர் தூய கரங்களுடன் இந்நீதிமன்றத்தை நாடவில்லை எனவும், மனுதாரரின் கோருரிமை மனு தகுதிப்பாடற்றது எனவும், எனவே மேற்படி மனு தள்ளுபடி செய்ய அருகதையுடையது என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக, செலவுத்தொகையின்றி இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 14 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN

Digitally signed by R MANIVARMAN
Date: 2023.07.14 18:02:59 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்:– இல்லை</u>

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

ம.சா.ஆ.1	25.12.1993	அனுபவ பாத்திய விடுதலை சுவாதீன கிரயபத்திரம்	நீதிமன்ற நகல்
ம.சா.ஆ.2	25.12.1993	அனுபவ பாத்திய விடுதலை சுவாதீன கிரயபத்திரம்	நீதிமன்ற நகல்
ம.சா.ஆ.3	10.07.2022	கணிணி பதிவிறக்க பட்டாக்கள்	நீதிமன்ற நகல்
ம.சா.ஆ.4		அ பதிவேடு	நீதிமன்ற நகல்
ம.சா.ஆ.5	20.05.2022	புல வரைபடம்	நீதிமன்ற நகல்
ம.சா.ஆ.6	03.01.2022	வீட்டுவரிரசீது	நீதிமன்ற நகல்
ம.சா.ஆ.7	03.04.2014	அ.வ.எண்.326/2004 ன் தீர்ப்பாணை	நீதிமன்ற நகல்

ம.சா.ஆ.8 03.01.2022 நி.ம.எண்.02/2022 ன் மனு, பிரமாண

பத்திரிக்கை நீதிமன்ற நகல்

ம.சா.ஆ.9 அடங்கல் கணக்கு நீதிமன்ற நகல்

ம.சா.ஆ.10 அ.வ.எண்.211/2022 ன் வழக்குரை நீதிமன்ற நகல்

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2023.07.14 18:03:08 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.